APPENDIX.

[*Vide* Answer to Starred Question No. 398 on page 219]

1.—(*a*) Yes.

(*b*) The details of the "Village Jeep Journal" are as follows:—

The "Village Jeep Journal" was a project of the Intensive Agricultural District Programme in Thanjavur district under the general supervision of the Joint Director of Agriculture (Package Programme) and the Project Officer, Thanjavur. It was purely meant to convey farm news on improved cultivation practices to farmers. The purpose of this project was to test the appeal and effect of agricultural information conveyed to the cultivators primarily by Audio-visual method.

2. This was taken up as a pilot exploratory project in Saliamangalam, a village nine miles east of Thanjavur. This programme was organised in consultation with Dr. Lyle R. Webster, Consultant on Agricultural Information and Communication. Mr. Marshall Bouton, a volunteer of American Friends Service Committee master-minded the programme and was actively associated with the project.

3. The following villages around Saliamangalam in the jurisdiction of the Agricultural Extension Officer, Saliamangalam, were selected:—

(1) Saliamangalam.

(2) Thirubuvanam.

(3) Poondi.

(4) Jambugapuram.

(5) Eduvagudi.

(6) Kalanjeri.

The "Village Jeep Journal" Project commenced operation from 1st March 1966 and was continued up to 26th April 1966, for a period of eight weeks.

பதில்.—(அ) ஆம்.

(இ) "கிராம ஜீப் செய்தித்தாள்" திட்டத்தின் விவரங்கள் பின் வருமாறு :—

"கிராம ஜீப் செய்தித்தாள்" திட்டம், தஞ்சாவூர் மாவட்ட மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டத்தின்கீழ் மேற்கொண்டுள்ள ஒரு வேலைத் திட்டமாகும். இது தஞ்சாவூர் வேளாண்மை இணை நெறியாளர் (முனைப்புத் திட்டம்), திட்ட அதிகாரி ஆகியவர்களின் பொது மேற்பார்வைக்குட்பட்டதாகும். சீர்திருத்திய விளைச்சல் முறைகளைக் குறித்த பண்ணைச் செய்திகளைக் குடியானவர்களுக்குத் தெரிவிப்பதே இத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். முக்கியமாகக் காட்சி–கேள்வி முறை மூலம் வேளாண்மைத் தகவல்கள் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டன. அவற்றை அவர்கள் எவ்வாறு எற்றுக்கொள்கின்றனர், அவை அவர்களிடம் என்ன விளைவு வற்படுத்தியுள்ளது என்பதைத் தெரிந்துக்கொள்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

2. இத் திட்டம், தஞ்சாவூருக்குக் கிழக்கே ஒன்பது மைல் தொலைவில் உள்ள சாலியமங்கலம் கிராமத்தில் ஒரு முன்னோடி ஆய்வுத் திட்டமாக மேற்கொள்ளப்பட்டது. வேளாண்மைத் தகவல் செய்தித் தொடர்பு ஆலோசகரான டாக்டர் லைல் ஆர். வெப்ஸ்டர் அவர்களைக் கலந்தே இத்திட்டம்

உருவாக்கப்பட்டது. அமெரிக்க நண்பர் ஊழியக்குழுவின் உறுப்பினரான ஸ்ரீ மார்ஷல் பவுட்டன் அவர்கள் இத்திட்டத்தை உருவாக்குவதில் பெரும் பணிபுரிந்து இத் திட்டத்தில் பெரிதும் பங்கு கொண்டார்.

3. சாலியமங்கலம் வேளாண்மை விரிவாக்க அதிகாரியின் அதிகார வரம்பிலுள்ள சாலியமங்கலத்தைச் சுற்றியுள்ள கீழ்க்கண்ட கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன :—

(1) சாலியமங்கலம்.

(2) திருபுவனம்.

(3) பூண்டி.

(4) ஜம்புகபுரம்.

(5) எடுவாக்குடி.

(6) களஞ்சேரி.

இத் திட்டம் 1966-ம் வருடம் மார்ச் மாதம் 1-ம் தேதியன்று செயல்படத் தொடங்கி 1966-ம் வருடம் எப்ரல் மாதம் 26-ம் தேதிவரை, அதாவது எட்டு வாரங்களுக்குச் செயல்பட்டது.